## 2.145 தமிழ்நாடு வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனம் கலைக்கப்பட்டது–மத்திய பண்டக சாலையில் உள்ள தளவாட சாமான்கள் ஏலத்தில் விட கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்

ஊரக வளர்ச்சி (தி3) துறை

அரசாணை (நிலை) எண். 86 | நாள் : 17.7.2002

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.229, ஊரக வளர்ச்சித் (இ4)துறை நாள் 30.8.2000.
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண். 91508/2000/ஆர்சிபி 2, நாள் 23.1.2001.

**ஆணை**

அரசாணை (நிலை) எண். 229, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 30.8.2000–ல் தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தை கலைத்து, ஆணையிடப்பட்டது. மேலும் அவ்வாணையில் தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தின் தலைமை அலுவலகம், வட்டார அலுவலகங்கள் மற்றும் மாநிலம் முழுவதும் அமைந்துள்ள இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் ,நிலங்கள், மதிப்புமிக்க இன்னபிற அசையா சொத்துக்கள், வாகனங்கள், வானொலிப்பெட்டிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், இவைகள் தொடர்பான உதிரி பாகங்கள் போன்ற அனைத்து அசையும்/அசையா சொத்துக்கள் மற்றும் இருப்புகளை சரிபார்த்து கணக்கிடவும், கணக்கிடப்பட்ட அசையும் சொத்துக்களுக்குள்ளான வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை அந்தந்த கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைவு செய்யப்பட வேண்டுமென்றும், கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைவு செய்தது போக, எஞ்சியுள்ள இதர உதிரிபாகங்கள், மரச்சாமான்கள், எழுது பொருட்கள் மற்றும் இன்னபிற அசையும் சொத்துக்களை நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தப்புள்ளி பெற்று ஏலமிட்டு, பெறப்படும் தொகையினை, நிர்ணயிக்கப்படலாகும் அரசுக் கணக்குத் தலைப்பில் ஒப்படைவு செய்ய ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. இதைத்தவிர இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள், இன்னபிற மதிப்பு மிக்க அசையா சொத்துக்கள் மற்றும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைவு செய்தது போக எஞ்சியுள்ள மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெற்று ஏலமிடப்படும் அசையும் சொத்துக்கள் போக எஞ்சியுள்ள வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து இதர அசையும் சொத்துக்கள் பற்றிய விபரங்களையும் அவைகளை எவ்வாறு உபயோகப்படுத்தலாம் என்பது தொடர்பாக அறிக்கை அனுப்பவும் ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. இவ்வாணையின்படி கலைக்கப்பட்ட தமிழ்நாடு உள்ளாட்சி நிறுவன வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவன மத்திய பண்டகசாலை இருப்புகள் மற்றும் களப்பணி அலுவலகங்களின் பண்டக சாலை இருப்புகளை ஒருங்கிணைப்பு செய்து பகுதி பகுதியாக பிரித்து ஏலம்விட படிக்கப்பட்ட கடிதம் 2ல் ஊரக வளர்ச்சி இயக்குநர் பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளார்.

பகுதி.அ. வானொலி மற்றும் தொலைக்காட்சி உதிரி பாகங்கள்

இவைகள் வாங்கப்பட்ட தோராய மதிப்புத் தொகையான ரூ.13,49,912.65ல் இப்பொருட்களின் தற்போதைய நிலையில் (as is where is condition) ஏலம் விடலாம்.

பகுதி.ஆ. கருவி கலத் தொகுதிகள்

இவைகள் யாவும் இயக்குநரகம், மண்டல வானொலி அலுவலகம் மற்றும் களப்பணியாளர்கள் உபயோகப்படுத்தப்பட்டவையாகும். இக்கலத் தொகுதி கருவிகள் முதலில் வாங்கப்பட்ட தொகையின் தோராய மதிப்பு ரூ. 2,55,404.49 ஆகும். இப்பொருட்களை தற்போதைய நிலையில் ஏலம் விடலாம்.

பகுதி.இ. தளவாடப் பொருட்கள்–

இயக்குநரகம், மண்டல வானொலி அலுவலகம் மற்றும் சேவை மையம் ஆகிய இடங்களில் 20 வருடங்களுக்கு மேலாக உபயோகப்படுத்தப்பட்ட தளவாடப் பொருட்கள் உள்ளன. இவைகள் வாங்கப்பட்ட தோராய மதிப்பு ரூ. 5,85,734.04 ஆகும். ஆனால், 20 வருடங்களுக்கு மேலாக உபயோகப்படுத்தப்பட்டதினால் இவற்றில் ஏற்பட்ட தேய்வு மற்றும் நைவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இப்பொருட்களின் தன்மைக்கு ஏற்றவாறு ஏலம் விடலாம்.

பகுதி .ஈ. பயனற்றப் பொருட்கள்–

இப்பொருட்கள் யாவும் ஏற்கனவே பயனற்றவை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு விதி 140ன்படி (Tamil Nadu Financial Code Vol I article 140) இப்பொருட்களுக்கு தற்போது மதிப்பு இல்லை எனக்கொள்ளலாம்.

**3.** (i) மேலே பத்தி 2(அ)ல் தெரிவிக்கப்பட்டுள்ள வானொலி மற்றும் பராமரிக்கப்படும் தொலைக்காட்சியின் உதிரி பாகங்களை ஊரக வளர்ச்சித் துறையினால் பராமரிக்கப்படும் வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளில் மட்டும் உபயோகிக்கலாம். ஆனால் திடீரென இந்நிறுவனத்தை கலைத்ததால், இப்பாகங்கள் அனைத்தையும் தற்போது பராமரிப்பு பணிக்கு உபயோகப்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. மேலும், வானொலி மற்றும் தொலைக்காட்சி உற்பத்தி முறையில் தற்போது நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதால் ஏற்கனவே வாங்கி வைக்கப்பட்டதும்/ உபயோகப்படுத்தப்பட்டதுமான உதிரி பாகங்கள் அனைத்தும் தற்போது வெளிச்சந்தையில் தேவை அதிகமில்லையாதலால் இத்தகைய பொருட்களை பொது ஏலம் விடுவதால் கணிசமான தொகை எதுவும் கிடைக்கப்போவதில்லை. எனவே, மேற்படி பொருட்கள் வாங்கப்பட்ட மொத்த தொகையில் 25 சதவீதம் வரை அடிமதிப்பாக (upset value) நிர்ணயித்து ஏலம் விடவும், அவ்வாறு ஏலம் எதிர்பார்த்தபடி அமையவில்லையெனில் பொருட்களின் மதிப்பினை மேலும் குறைப்பதற்கும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி வழங்கலாம்.

(ii) ஏனைய பயனற்ற தளவாட பொருட்கள் மற்றும் கருவி கலத்தொகுதிகள் தேய்மானத்தினால் புத்தக மதிப்பீட்டின்படி இவைகளுக்கு மதிப்பு இல்லை எனக் கருதப்பட்டு, இவைகளின் ஆயுட்காலத்தை கருத்திற்கொண்டும் இவைகள் வாங்கிய விலையில் 5 சதவீதம் அடிமதிப்பு ஏலத்தொகையாக நிர்ணயிக்கலாம்.

(iii) இத்தகைய பொருட்களை ஏல விடுப்பில் பங்கேற்பதற்கு அரசு ஒப்புதல் பெற்ற ஏலதாரரான மெஸர்ஸ் முர்ரே அண்ட் கம்பெனி, சென்னை–1 அவர்களுக்கு அனுமதி வழங்கலாம்.

(iv) மேலும், தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி 1 விதி 140ன்படி ஏலம் நடத்துவதற்கு ஏதுவாக கீழ்க்கண்ட திருத்தப்பட்ட சான்றிதழை பதிவு செய்வதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி வழங்கலாம்.

"அரசாணை (நிலை) எண். 229, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 30.8.2000ன்படி அரசு தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தைக் கலைத்ததால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதி அ முதல் ஈ–ன் கீழ் உள்ள அனைத்து பொருட்களும் உபயோகப்படுத்த முடியாததும், தேவையில்லாததாகவும் உள்ளன என ஊரக வளர்ச்சி இயக்குநர் தானே கண்டறிந்து மனநிறைவு கொண்டுள்ளார். இதன் அடிப்படையில் இவைகள் அனைத்தும் புத்தகக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்படுகின்றன"

**4.** ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பி வைத்துள்ள மேற்காண் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலித்து மேலே பத்தி 2 மற்றும் பத்தி 3ல் ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரைக்கு ஒப்புதலளிப்பதுடன், ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெறப்படும் விலைப்புள்ளிகளில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏலக் கம்பெனியால் தரப்பட்டுள்ள கழிவுத் தொகை மற்றும் இதர நிபந்தனைகளை ஒப்பிட்டு L1 எந்தக் கம்பெனி என்பதை தெளிவு செய்து அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட முறையில் ஏலம் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும், தமிழ்நாடு ஒப்பந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படையான (The Tamil Nadu Transparency in Tender Rules) விதிமுறைகள் மற்றும் ஏலம் விடுவது சம்பந்தமாக நடைமுறையில் உள்ள அரசு விதிமுறைகளை கடைபிடித்து ஏலத்தில் அரசுக்கு அதிக லாபம் கிடைக்க வழிகோர வேண்டும் எனவும், L1 கம்பெனியிடம் பேரம்பேசி கழிவுத் தொகையை குறைப்பதற்கு ஆவண செய்ய வேண்டும் எனவும், ஏலத்தில் கிடைக்கும் தொகையை கீழ்க்காணும் அரசுத் தலைப்பில் செலுத்த வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

"0515 00 ஏனைய வளர்ச்சித் திட்டங்கள்– 800.ஏனைய வரவுகள்–

AD. பல்வகை வரவுகள்–(த.தொ.கு. 0515–00–800–AD–0004)".

**5.** மேலும், தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு, தொகுதி 1, விதி 140–ன்படி ஏலம் நடத்துவதற்கு ஏதுவாக கீழ்க்காணும் திருத்தப்பட்ட சான்றிதழை பதிவு செய்வதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

"அரசாணை (நிலை) எண்.229, ஊரக வளர்ச்சித் துறை நாள் 30.8.2000–ன்படி அரசு தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தைக் கலைத்ததால் பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி 1 முதல் 4ன் கீழ் உள்ள அனைத்து பொருட்களும் உபயோகப்படுத்த முடியாததும், தேவையில்லாததாகவும் உள்ளது என ஊரக வளர்ச்சி இயக்குநர் தானே கண்டறிந்து மனநிறைவு கொண்டுள்ளார். இதன் அடிப்படையில் இவைகள் அனைத்தும். புத்தகக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்படுகிறது".

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.49738/RD/2002–1, நாள் 9.7.2002 மூலம் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எல்.என். விஜயராகவன்**
அரசு செயலாளர்